☞ மாதிரிக்காகப் பத்திரிகையைப் பெறுவோர் உடனே தங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டுகிறோம்.

FICE OF ... REGISTRAR ... 15 JAN 19..

# பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்களடங்கிய மாதப்பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 2.] Copy Right. [வெளிநாடு ரூ. 2—8—0.

| வருஷம் 14. | திரிச்சிராப்பள்ளி : ஜனவரி மீ —1918. | மாதம் 3. |
|---|---|---|

## கம்பரின் சிறுபருவ விளையாடல்.

---

"எல்லாம் அறிந்தவர்களும், ஏதும் அறியாதவர்களும் இல்லை"—என்றெண்ணப்படும் இவ்வுலகத்தில், காலா காலங்களில் தேசங்கள்தோறும் பாஷைகள்தோறும் பேரறிவில் முதிர்ந்த பரமஞானிகள்—எல்லாம் அறிந்தவர்களாகத் தோன்றி, ஏதுமறியாதவர்களுக்கு அறிவு புகட்டி, தங்கள் உள்ளத்தில் உதித்த ஞானக்கினி ஜுவாலையினால் உலகத்துக்கு மெய்யறிவுச்சுடர் கொளுத்திவருகிறார்கள்.

"கொரான்" வேதத்திலுள்ள மூலமந்திரத்துக்கு உபவாக்கியம் ஒன்றுண்டு. அது—"கடவுள் ஒவ்வொரு ஜாதியாருக்கும் தங்கள் தங்கள் பாஷையில் ஒரு தீர்க்கதரிசியை அனுப்புகிறார்"—என்பதாம். ஞானமானது தன் மக்கள் தன் பொக்கிஷசாலையில் புகுந்து தன் திரவியக் குவியல்களைத் திறந்தெடுத்து அநுபவிக்கும்படி கல்விக்களஞ்சியத் திறவுகோலை ஒரே "ஹோமர்" கையிலும், ஒரே "ஷேக்ஸ்பியர்" கையிலும் மாத்திரமல்ல—பற்பல தேசங்களில் பற்பல ஹோமர்கள் கையிலும், பற்பல ஷேக்ஸ்பியர்கள் கையிலும் கொடுத்துவருகிறது. மேற்கண்ட கோரான் உபதேசப்படி தமிழ் பாஷைக்கும் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி அதாவது ஒரு ஞானசிரேஷ்டன் இருந்தார். அவர் பெயர் கம்பர். அவரும் தமக்கு முன்னும் பின்னும் இருந்த தீர்க்கதரிசிகளைப் போலவே உலகத்துக்கு வந்தார். உலகம் அவரை அறியவில்லை. உலகம் அவருக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர் அப்பத்தைக் கேட்க கல் கொடுக்கப்பட்டது. அவர் பசியின் கொடுமையால் கஞ்சிக்கு இரந்து திரிகையில் கரைந்து விழும் வேலி மண்ணும், இடிந்துவிழும் சுவர்ச்செங்கல்லும் காட்டப்பட்டது. கோவண ஆண்டியாய்க் கோவேந்தன் அவரைத் துரத்தவும் அவருக்கு விதித்திருந்தது.

கம்பர் பாக்கியவதியாகிய தமது தாயாரின் கர்ப்பத்தில் அடங்கி வெளிப்படுமுன்னதாகவே, சோழ தேசத்தில் குறுநில மன்னனாக கம்ப நாட்டை ஆண்டுவந்த அவருடைய பிதா ஏதோ கலாதி நேரிட்டதில் உயிரிழந்து மாய, உள்ளது உரியதையெல்லாம் பகைவன் பறிகொண்டதால்,

பூரண கர்ப்பிணியாயிருந்த அவருடைய தாயார் திருவழுந்தூருக்கு ஒடிப் போய், அங்கு ஓர் ஓச்சன் கூரை நிழலில் ஒதுங்கிக் காலந்தள்ளி வருகையில் கம்பர் பிறந்தார். பிறந்து சிலகாலம் சென்றபின் அவருடைய பிதாவுக்கு இஷ்டனுகிய திருவெண்ணெய்நல்லூர் சடையப்பமுதலியாரென்பவர் தாயையும் சேயையும் தமது கிரகத்தில் ஏற்றுக்கொண்டு அன்ன வஸ்திராதிகள் அளித்துப் பராமரிக்க, அந்த ஆதரவிலே கம்பருடைய பாலிய காலம் முழுவதும் இருந்தார்கள். கம்பர் கல்வி பயிலும் பிராயம் அடைந்தவுடனே, மேற்படி முதலியார் தம்முடைய பிள்ளைகளோடு அவரையும் பாடசாலைக்கு அனுப்பி கல்வி பயின்றுவர ஒழுங்கு செய்ததாகத் தெரியவருகிறது. அந்தப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயருக்கு வயிரபுரம் என்னும் கிராமத்தில் ஒரு புன்செய் நிலமிருந்ததாம். அதிலே கம்பும் தினையும் கதிர் தள்ளிப் பாலடைந்து மணி முற்றிருந்ததால், அந்த விளைவைக் காக்கும்படி அவர் முறை முறையாய்ப் பிள்ளைகளை அனுப்பி வருகையில் ஒரு நாள் கம்பச்சிறுவனும், தன் முறையிலே போய்க் காவல் நின்றுனும். அப்புராதிபதியாகிய காளிங்கராயன் குதிரை அங்கே மேய வரவும், சிறுவன் அதை அதட்டி ஓட்டியும் அது போகாமல், அஞ்சாது நின்று, பயிரை மேய்ந்து அழித்தபடியால், காவல் நின்ற பையன் கையை நெறித்துக்கொண்டு, "ஐயோ உபாத்தியாயர் அடிப்பாரே, என்ன செய்வேன்"—என்று ஏங்கி ஏங்கி அழுதுகொண்டு அருகிலிருந்த காளி கோவிலின் ஸமீபத்தே சென்றுனும்.

உடனே காளி பிரஸன்னமாகி நாக்கை நீட்டச்சொல்லி, அதிலே பீஜாட்க்ஷரத்தைப் பதித்துப் பயப்படாதே என்று தேறுதல்படுத்தி அனுப்பிருராம். சிறுவன் திரும்பிவந்து பார்க்கையில் குதிரை பின்னும் மேய்ந்துகொண்டிருந்ததைக் கண்டு, குதிரையைத் துரத்திப் பயிரைப் பாதுகாக்க வேறுவழி காணுமல், வாய்விட்டு வையும் வகையாய்,

"வாய்த்த வயிரபுர மாகாளியம்மே கேள்
காய்த்த தினைப்புலத்திற் காலைவைத்துச்—சாய்த்து
கதிரை மாளத்தின்ற காளிங்கராயன்
குதிரை மாளக் கொண்டு போ"

என்று கவிபாடிச் சபித்தானும். அவ்வாக்கு வலியால் குதிரை உடனே துடிக்கத் துடிக்கச் செத்து விழுந்ததாம். இதை உபாத்தியாயர் அறிந்து, பரக்கப் பரக்க ஓடிவந்து, ஐயோ ஊராள்வான் குதிரையாச்சே, என்ன அனர்த்தம் வந்து விளையுமோவென்று சித்தங் கலங்கித் திகைத்து நின்றுராம்.

* * * * * * * *

☞ இத்துடன் இது முடிகின்றது. இதற்குப் பின்னுள்ள விவரங்களை "விநோதரசமஞ்சரி" ஆதிய நூல்களிற் கண்டுகொள்க,

# பிரேமநாதன்.

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

ஸஞ்சீவபாபு பின்வருமாறு சொல்கிருர்:—

சமயபுரத்தில் ஒரு தற்கோலைக்காட்சி தயாரிக்கப்பட்ட இடத்திற்கு அருகே இடிக்கப்பட்ட ஒரு கிணறு இருந்ததென்றேனே? அங்கு மறுபடியும் சென்று கிணற்றில் இறங்கிச் சோதித்தேன். ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! ஏற்கெனவே கிடைத்த இரண்டு துண்டுகளைப் போலவே--பிரேமநாதனின் பெயரை நெசவின் குறுக்கே போடப்பட்டுள்ள இன்னொரு துண்டும் பத்து பவுன்களின் முடிப்போடு கிணற்றின் அடியில்கிடந்து அகப்பட்டது. அந்தக் கிணற்றோரத்தில் பிரேமநாதனின் காலடிகள் காணப்பட்டனவென்று முன்னொருதரம் நான் சொன்னதானது ஒரு ஊகிப்புதான். டாக்டர் இராமநாத முதலியார் பிரேமநாதனுக்கு வலது காலில் ஆறுவிரல்கள் உண்டென்றும், இடதுகாலில் சாதாரணமாக ஐந்து விரல்களே இருந்ததென்றும் எனக்குத் தெரிவித்திருந்தார். அதை ஆதாரமாகக் கொண்டே சோபனத்திரி ஸ்வாமியின் தோட்டத்திலும், சமயபுரக் கிணற்றோரத்திலும்—ஆறு விரல்களுள்ள காலடிச்சுவட்டின் பொருத்தங்களை நோக்கி, பிரேமநாதன் அக்கிணற்றருகிலும் வந்திருக்கவேண்டுமென்று கருதினேன். அதே கிணற்றிலேயே பவுன் முடிப்புள்ள—பிரேமநாதன் என்ற பெயருடன் கூடிய துண்டும் கிடைத்திருப்பதால்—எனது முந்திய ஊகிப்பின்படியே பிரேமநாதன் அக்கிணற்றோரம் வந்திருக்கிறனென்றேநிச்சயமாகிறது. அதாவது சமயபுரத்தில் கூரைவீட்டில் கொலையுண்டிருந்த அந்தக் காப்பிரியும்—பிரேமநாதனும்—ஏககாலத்தில் சிலரால்—அல்லது பலரால் எதிர்க்கப்பட்டிருக்கவேண்டும். பிரேமநாதனைக் கிணற்றில் தூக்கி எறிந்தும், அக்காப்பிரியைக் கோலை செய்தும் போட்டிருக்கிறார்கள். பிறகு கொலையைத் தற்கொலைபோல்—கூரை வீட்டில் தயாரித்து வைத்து விடுகிறார்கள். கிணற்றில் தள்ளப்பட்ட பிரேமநாதன் மறுநாள் சவமாக மிதப்பானுதலின்—அவன் கிணற்றின் கைப்பிடிச் சுவரின்மீது சாய்ந்ததுபோலவும், அச்சுவர் இடிந்து அவனும் கிணற்றில் தவறி விழுந்து தற்செயலாக மரித்திருக்க வேண்டுமென்று ஜனங்கள் நினைக்கும்வாறாக ஏற்கெனவே கிணற்றுச் சுவரை இடித்து வைத்திருக்கவேண்டும். கிணற்றில் தள்ளப்பட்ட பிரேமநாதன் மூழ்கி எழுந்து வெளியேறித் தப்பித்துகொண்டுவந்து விட, இதையறிந்த பாதகர்கள் மறுபடியும் அவனைக் கொன்றுவிட நாகரீக சூழ்ச்சியாய் முயற்சிக்கிறார்கள். அது சித்தித்து விடுகின்றது. பிரேமநாதன் சவமாகின்றன்.

ஜனகலட்சிமி—"இதுவரையில் பிடிகொடுத்துப் பேசாத நீங்கள் இப்பொழுது சற்றே உறுதியுடனும் பேசுகிறீர்கள். உங்களுடைய துப்பறியும் புலமையை அமைதியுடனும், தைரியத்துடனும், செய்கடன் உணர்ச்சியுடனும் நடத்திச் செல்லுகின்றீர்கள். பிரேமநாதனை அவ்வாறாகக் கொன்ற கொலை பாதகர்கள் யாராக இருக்கலாம்?"

ஸஞ்சீவ:—"எல்லாவற்றிலும் பூர்த்தியான ஞானமுடையவர் ஒருவருமில்லையென்று பூர்வகாலத்து மனுதர்ம சாஸ்திரமே கூறுகின்றது. கொலைபாதகர்கள் இன்னாரென்று ஆராய்வதற்கு முன்பு, கொஞ்சம் மனதைத் தாராளமாகவிட்டு நீள யோசிக்கவேண்டியிருக்கிறது. அவ்வாறான யோசனையின்போது—தாமோதரம் ஐயங்காரின் மரணத்திற்கும் பிரேமநாதனின் கொலைக்கும் ஒரு அற்புதமான நெருங்கிய சம்பந்தம் ஏற்படுகின்றது."

ஜனகலட்சிமி:—"அது நூதனமான பிரஸ்தாபம். தெளிவாகக் கூறவேண்டும்."

ஸஞ்சீவ:—"அப்படி நவீன மேதுமில்லை. எல்லாம் மூளையுருக யோசிப்பதின் பலன்தான். தாமோதரம் ஐயங்காரின் நட்பு வகையில் மயங்கி ரங்கபாஷியம் நாயுடு 500 ரூபாய்க்கு உடன் கையொப்பமிட்டதும், ஜெகநாதனும் விஜயநாதனும் நாட்டுக்கோட்டை செட்டியாரிடம் சென்று தூண்டி ரங்கபாஷியத்துக்கு வாரண்டு பிறப்பித்ததும் தெரிந்த விஷயமே. அந்த வாரண்டுக்கு அகப்படாமல் தமது மணியக்காரத் தெருவிலுள்ள வீட்டில் மறைந்திருக்கும்படியும், தமது வீட்டிற்கு விஜயநாதனும் சென்னையிலிருந்து வந்திருப்பதால், அங்கே நேசப்பொழுது போக்க வெகு உல்லாசத்தோடிருக்குமென்றும், வாரண்டு கெடுவு தீர்ந்ததும், தாமோதரம் ஐயங்காரைச் சந்தித்துக் கண்டித்து அந்த 500 ரூபாயையும் அவர் செலுத்திவிடும்படிசெய்து விடலாமென்றும்—ஜெகநாத நாயுடு கூறியதாயும், அதற்கு சம்மதித்து விஜயநாதனுடன் இருக்க விரும்பிய ஆசையால் ஜெகநாத நாயுடுவுடன் உனது பர்த்தா மணியக்காரத்தெருவிலுள்ள வீட்டிற்குச் சென்று மறைந்திருந்தாரென்றும் நீ நேற்று கூறினாயல்லவா? அதிலிருந்தும் நான் இன்று காலையில் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தேன். அந்த முடிவு சரியாகத்தான் இருக்கவேண்டும்."

ஜனகலட்சிமி:—"நான் தெரிவித்தது சாதாரண விஷயந்தானே. பிரேமநாதன் இறப்பதற்கு முந்தியதினத்தில் தான் ஜெகநாத நாயுடுவின் வீட்டிற்கு எனது பர்த்தா சென்றாரென்றேன். இதைக்கொண்டு என்ன முடிவுக்கு வந்து விட்டீர்கள்?"

ஸஞ்சீவ:—"உனது பர்த்தாவின் மீது கடன் வாரண்டு பிறப்பதற்கு விஜயநாத—ஜெகநாதர்கள் காரணம் யென்பது இதில் முக்கிய விஷயம். அவ்விதம் வாரண்டு பிறப்பித்து ரங்கபாஷியத்தை ஜெகநாத நாயுடு தமது வீட்டிற்குத் தந்திரமாய் வலை வீசி இழுத்து,—ரங்கபாஷியம் வெளியிற்செல்லாதவாறு வாரண்டு தடையை ஏற்படுத்தி—மாடியின் மீது அறைக்குள் இருக்கும் அறையில் அவரை இருக்கவிட்டு, மோசநண்பனான விஜயநாதனும் வேசியன்பு காட்டிக்குலாவ—இந்தப்படி அவரை அவ்வறையில் தானே அசையாதிருக்க வைத்து—முடிவில் அவர்மீது கொலைக்குற்றத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். இதில் தாமோதரம் ஐயங்கார் ஏதேனும் சில விஷயங்களில் இந்த ஜெகநாத—விஜயநாதர்களுக்கு உட்கையாக இருந்திருக்கவேண்டும். ரங்கபாஷியத்தின்மீது வாரண்டு பிறந்த சமயத்தில் ஐயங்கார் ஒளிந்துக்கொண்டிருக்கக் கூடுமென்று தோன்றுகிறது. அப்படி மறைந்துகொள்ளும்படி விஜயநாத—ஜெகநாதர்களின் தூண்டுதல்கள் ஏதேனும் ஏற்பட்டிருக்கலாம். அந்த வகையில் ஐயங்காருக்கு, விஜயநாத—ஜெகநாதர்கள் அதற்கு இனாமாகக் கைப்பணம் தருவதாகக்கூடத் தெரிவித்திருக்கலாம். அந்தப் பணம் சம்பந்தமாக இவர்களுக்குள் ஏதாவது பிணக்குகள்—பிகுவுகள்—அதிகப் பேச்சுகள்—நேர்ந்து, அதனால் தாமோதரம் ஐயங்காரும் சிறிது முறண்டுகொண்டிருக்கலாம். இவர் இங்ஙனமாக வேற்று மனிதராக மாறுவதுகண்டு, அவரால் தங்களது துஷ்கிருத்தியங்களின் ரகசிய பாகங்கள் எங்கு வெளியில் வந்து விடுகின்றனவோ வென யோசித்து, மூக்குத்தூளில் மூளைக்கொதிப்புத் திராவகத்தைக் கலந்து, அத்துடன் ஒரு வித சுகந்தமும் சேர்த்து, அவருக்குக் கொடுத்துவிட, அந்தப் பொடியை அவர் உறிஞ்சியதும் அது மூளையில் தாக்கி வேலைசெய்ய—அதனால் அவர் இறந்தவராகவேண்டும். இவ்வாறு விஜயநாத—ஜெகநாதர்

கள் யாருக்கு உளவாக உட்கையாக—இருந்து இந்த வேலைகளைச்செய்தார்களென்ற பாகம்—இன்னும் இருட்டறையிலே கண்ணைக் கட்டிவிட்டது போலிருக்கிறது."

ஜனகலட்சுமி:—இப்பொழுது எனக்கும் விளங்குகின்றது ஐயங்கார் மறைந்திராவிட்டால், எனது பர்த்தா அவரை நேரில் கண்டு வாரண்டு தொகையை அந்த ஐயங்காரைக்கொண்டு கட்டும்படி ஏற்பாடு செய்திருப்பாரானதால், அவர் ஜெகநாதனின் வீட்டிற்குச் செல்ல நிமித்தமிராது. வாரண்டு பிறந்ததும் அரசப்பனையும் வேறு சிலரையும் அனுப்பி, ஐயங்காரைப் பல இடங்களில் தேடியும் அவர் தென்படவே யில்லை. அதற்குப் பிறகுதான் ஜெகநாதன் சொற்படி எனது பர்த்தா அவர் வீட்டிற்குச் செல்வதானார்."

ஸஞ்சீவ—"ஐயங்கார் மறைந்து கொள்ளாமலிருந்து—அக்காரணத்தால் ரங்கபாஷியமும் ஜெகநாதனின் வீட்டிற்குச் செல்ல ஹேதுக்கள்—சந்தர்ப்பங்கள்—நேராது போகுமானால்; பிரேமநாதன் ஜெகநாதனுடைய வீட்டில் இறந்திருந்தாலும்—அக்கொலையை ரங்கபாஷியம் செய்ததாக ரூபிக்க—மாடிமீது ரங்கபாஷியம் அப்போது இருக்கக் காரணமில்லையானதால்—பிரேமநாதன் கொலைக்குற்றம் ரங்கபாஷியத்தின் மீது விழ—இடம் இருந்திருக்கமாட்டாது. எனவே, இதில் பிரேமநாதன் கொலைக்கும் ஐயங்காரின் மரணத்திற்கும்—ஏதோ நெருங்கிய சம்பந்தம் இருக்கலாமென்று அநுமானம் உண்டாகின்றது. இவ்வித சம்பந்தத்தை யோசித்தால் இவ்விரு கொலைகளையும்—இன்னும் சமயபுரத்தில் நேரிட்ட காப்பிரியின் கொலையையும்—ஆக இந்த மூன்று கொலைகளையும் ஒரே கூட்டத்தார் நடத்தியிருக்கவேண்டுமென்றும் தோன்றுகிறது"—என்று இங்ஙனம் 'பல விஷயங்க'ளைப் பற்றியும் ஸஞ்சீவபாபு ஜனகலக்ஷ்மியிடம் பேசிக்கொண்டிருந்தார்.

# அத்தியாயம்—11

## ஸஞ்சீவபாபுவின் சூழ்ச்சி.

அரசப்பன் வீட்டுச் சோதனையில் வேணுகோபால்நாயுடுவின் இரண்டாவது உயில் பத்திரம் அகப்பட்டதானது ஸஞ்சீவ பாபுவுக்குப் பற்பல யோசனைகளை யுண்டாக்கின. அவையாவன:—அரசப்பனே வேணுகோபால் நாயுடுவின் வீட்டில் நெடுநாளைய வேலைக்காரன். அவன் மீது எல்லோருக்கும் பரம விஸ்வாசம். பம்பாய் நகரில் வேணுகோபால் நாயுடு காலஞ்சென்ற தருணத்திலும், அங்கு அவர் இரண்டாவது உயில் எழுதிய சமயத்திலும் உடனிருந்தவன் அரசப்பனே. பிரதி மனிதனும் தனது அந்தியகாலத்தில் பல சங்கதிகளை வெளியிட்டுச் சொல்வது வழக்கம். அவை, தாம் நெடுநாளாய் மறைத்து வைத்திருந்த ரகசியங்களாகவோ, அல்லது தமக்குப் பின் நடைபெற வேண்டிய ஏற்பாடுகளைக் குறித்தோ, தமது கடன் வரவு செலவு சம்பந்தமானவைகளாகவோ, தாயாதிகளுக்கு தமது சொத்துகள் சேராதிருக்கும்படியான வழி வகைகளாகவோ, தான் ரகசியத்தில் மறைத்துவைத்திருக்

கும் தனராசிகளைக் குறித்தோ—இவ்வாருன பல விஷயங்களைப்பற்றிய தாகவும்—அச்செய்திகள் இருப்பது சகஜம். தமக்குப்பின் தமது குடும்ப நிர்வாகம் இன்னவிதமாய் இருந்து வரவேண்டுமென்று பேசி ஏற்பாடுகள் செய்வதும் ஸர்வஸாதாரணம். உலகத்தில் நெடுநாள் ஜீவிகளாக இருக்கப்போவதாய் நினைத்த அவர்கள், தமது வாணுள் சுருங்கிவிட்டதென்பதை அறிந்த காலத்தில் அனைத்தையும் விட்டுப்போக வேண்டி யிருக்கின்றதே—என்ற ஆற்ற முடியாத துக்கத்தில் அவர்கள் பேசுகிற வாசகங்கள் மிக்க அழுத்தமானதாகவும், உறுதியுடனும் செய்யப்படவேண்டுமென்று வற்புறுத்தப் படுபவைகளாகவும், ஆக்குரோசத்துடனும் சொல்பவைகளாகவும் இருக்கக் காண்கிறோம். அவ்வாருக, வேணுகோபால் நாயுடு தமது அந்திய திசை நெருங்கிவிட்டதென்று அறிந்த நேரத்தில்—அவருக்குப் பந்துவும் தாயும் தந்தையும் மனைவியும் யாவுமாய்—தோழனுய் அருகே காத்துநின்றவன் இந்த ஒரு அரசப்பனே தான். வேணுகோபால் நாயுடுவோ பிரேமநாதனுடைய குடும்பத்தின் மூல புருஷர். அவர் அரசப்பனுக்கு தமது கடைசி காலத்துச் செய்திகள் பலவற்றைத் தெரிவித்திருக்கவும் கூடும். அவசர அவசரமாய் உயில் எழுதுகிற சமயங்களும், எழுதிய பத்திரங்களை ரிஜிஸ்தர் செய்கிற சமயங்களும், அந்த ஆபத்தான சமயத்தில் அதற்கு ஆயிரம் இடையூறுகள் குறுக்கிட்டுக்கொள்வதும்—எல்லா அவதிகளும் துன்பங்களும் சோதனைகளும் அப்போதுதான்! இரண்டாவது உயிலை வெளியிடாது ரகசியத்தில் வைத்திருக்குமாறு வேணுகோபால்நாயுடு தமது கடைசிகாலத்தில் அரசப்பனுக்குப் போதித்தாரோ யாதோ! அவ்விதமில்லாவிடடால் இத்தனை வருஷகாலமாக உண்மையான சத்தியவந்தனுகிய அரசப்பன் அந்த உயிலை ரகசியத்தில் காப்பாற்றவேண்டிய முகாந்தரம் என்ன? பிரேமநாதனே அனேக வருஷங்களுக்கு முன்னரே காணமற்போனவன்; இறந்து விட்டவர்களில் ஒருவனுகக் கருதப்பட்டவன்; அவன் தெய்வீகமாய் ஜன்ம பூமிக்குத்திரும்பி ஏதோ துரதிஷ்டத்தால் கொலையுண்டு போகிருன். அவ்வாருக நேற்று தான் வந்து இறந்தொழிந்த அத்தகைய பிரேமநாதன்மீது அவ்வளவு அபிமானம் அரசப்பன் கொள்ளக் காரணம் என்னவாயிருக்கக்கூடும்?. அவன் கொலையைக் கேட்டதும் சித்தம் சிதறிப் பித்தனுகி, அவன் பெயரையே ஸதா கூறியவனுய் உளறத்தொடங்குவதானுல்,—அத்தனை அபிமானம் பிரேமநாதனிடம் வைப்பதற்கு,—அவன் உயிரோடிருக்கும் செய்தியை நெடுநாளாக அரசப்பன் அறிந்துவைத்

☞ அடுத்த பத்திரிகையிலிருந்தும் விரிவாய்த் தரப்படும். பழய சந்நாதார்களுக்கு அடுத்த பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவோம். அன்புடனும்ஒப்புக்கொள்ளவேண்டுகிறோம்.

## விவாக தம்பதிகள்.

கணவன் மனைவியைத் தேடுவதில் நமக்கு பூரண சுதந்தரம் வேண்டும்; ஏனெனில் நமது வாழ்நாளின் சுக துக்கங்கள் நமக்குவரும் மனைவியைப் பொறுத்ததாய் ஏற்பட்டிருப்பதால் அதனை அதற்குத் தக்கபடி செய்துகொள்ளவேண்டும்; என்று ஒருபக்கம் நவஇந்தியா சொல்ல:

புராதன இந்தியாவோ அப்பா, அப்படியன்று; மணம் என்பது மக்களின் விருத்தியின் பொருட்டேயொழிய; இன்ப நுகர்ச்சியின் பொருட்டன்று; மக்களைப் பெறுவதால் ஸமூகத்தின் நன்மை தீமைக்குப் பாத்தியப்பட்டவனாகிறாய். ஆகையால் ஸமூகம்—இன்னாரை மண—இன்னாரை மணக்காதே—என்று உனக்கு ஆக்ஞையிடும்; அதற்கு நீ வணங்கி நடந்துகொள்ளின் அதனால் ஸமூகத்திற்கு நன்மையுண்டாகிறதாகையால், பலருடைய நன்மையின் பொருட்டு ஒருவனான உன் இன்பத்தை—அதனை நுகர ஆசிக்கும் உன் இச்சையை ஒழி என்கிறது.

*
* *

புருஷன்:—(நிச்சய தாம்பூலம் ஆய்விட்டது.) ஒருக்கால் பெண் எப்படியிருக்குமோ தெரியவில்லை என்று மனதில் நினைக்கிறான். பெற்றோர்கள் காசுக்கு ஆசைப்பட்டு எந்தக் தூங்கையாகிலும் கட்டிவிடுவார்களோ என்று உன்னியுன்னிக் கலங்குகிறான். கல்யாணகாலம் நெருங்கிவிட்டது. பையனுக்குப் பொறுமை என்பதே கொஞ்சமும் கிடையாது-

மணப் பெண்ணின்தாய்:—நிச்சியார்த்தம் செய்ய வந்தவர்களெல்லாம் மத்தியஸ்தர்கள் தானே! நமது பெண்ணின் கழுத்தில் தாலிமட்டும் ஏறிவிட்டால் பிறகு இவர்களை நாம் என்னத்திற்கு லக்ஷியம் செய்ய? மாப்பிள்ளையை நமது வசப்படுத்திவிடலாம். மாப்பிள்ளையின் தாயாரை மெதுவாக வீட்டை விட்டுத் துரத்திவிட்டு, அவளுக்குப் பதிலாக நாம் நமது பெண்ணோடு மாப்பிள்ளையின் வீட்டுக்குப்போய்ச் சாஸ்வதமாய்க் குடியேறிவிடலாம். இனி அந்த வீடு, நகைகள், பாத்திரங்கள்—எல்லாம் நமக்குச் சொந்தம் தானே! நம் இஷ்டப்படி; செலவு செய்யலாமல்லவா? நமது மகனையும் அங்கேயே அழைத்துக்கொண்டு போய்விடலாம். நாம் பக்கத்திலிருந்து நமது பெண்ணுக்கு ஸதாகாலமும் சொல்லிக் கொடுத்துக்கொண்டுவந்தால் தான், போதனை செய்துவந்தால்தான்—மாப்பிள்ளைக்கு நெருங்கியவர்களை வீட்டை விட்டோட்டவும், உள்ளது உரியதுகளை நமது வசப்படுத்திக் கொள்ளவும், மாப்பிள்ளை நமது பேச்சுகளைக்கேட்டு நமக்குட்பட்டு நடந்து கொள்ளும்படி செய்யவும்—கூடுமானதாய் இருக்கும் என்று தனக்குள் பல பல நினைத்துக்கொள்கிறாள். தன் மகள் ஒன்றிக்குடித்தனமாக—தனியாகப் புருஷனுடனிருந்து ஹாயியாக வாழ—என்னென்ன செய்யலாம்—எப்படி எப்படி கோள் மூட்டலாம்—என்று யோசித்துக்கொண்டு நிற்கிறாள்.

மணப்பெண்.—நிச்சய தாம்பூலம் ஆனதுமுதல் என் உடம்பு இளைத்துக்கொண்டு வருகிறது. என்றைக்கு நமது ஆசைக் கந்தர்வனைக் காணுவோமோ என்ற ஏக்கம் அதிகம். இராத்தூக்கமே இல்லை. நித்திரையிலும் இந்த எண்ணங்கள் கனவுடன் கலந்து தோன்றுகின்றன. இன்னும் நாலு நாள் எப்படித் தள்ளப்போகிறோம் என்று நினைக்கிறாள். பெருமூச்சுவிடுகிறாள். முகம் மாறுகிறது. பெற்றோர்கள் கேட்பின், ஒன்றுமில்லை என்று சொல்லி விட்டு, உள்ளே போய் படுத்துக்கொண்டு சதா கணவன் ஞாபகமாகவே இருக்கிறாள். அதற்குள் அவன் தனக்கு சொந்தமானவனாய் விட்டது போலவும், தன்னிலே அவன் மயங்கி விட்டது போலவும், இனி தன் கைக்குள் அவனை சிக்கவைத்துக்கொண்டு பம்பரம் போலாட்டலாமென்றும், அவன் சொத்து உடைமைகள் யாவும் தன்னுடையதே யென்றும், தானும் அவனும் தனிக் குடித்தனம் செய்யவேண்டுமென்றும் எந்த விதத்திலும் அவனை அவனுக்கு வேண்டியவர்

களிடத்திலிருந்து பிரித்துவிட வேண்டுமென்றும் மனோராஜ்யம் செய்து கொள்கிறாள். அதே நினைவாக நிற்கிறாள்.

புருஷன்:—கல்யாண தினம் வந்துவிட்டது. தலைமயிரைச் சீவிமுடித்து அடிக்கடி கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கிறான். ஸோப்பைப் போட்டுக் கழுவுகிறான். அடிக்கடி நெற்றிக்கு இட்டுக்கொள்கிறான். சற்று உல்லாஸமாய் ஆனந்த பைரவி பாடிக்கொண்டு உலாவுவதற்கு வெளியே போகிறான். பாடும் பொழுது தனக்கு வரப்போகும் மனைவி கருப்போ செவப்போ என்னும் எண்ணம் மனதில் குடிகொண்டு ஒரு பக்கம் அடித்துக்கொள்கிறது. ஆயிற்று—விவாகதினமும் நெருங்கியது—புறப்படுகிறான். மனைவியைப் பார்க்க வேணுமென்ற ஆசை துடிதுடிக்கிறது.

பெண்:—ஜன்னலின் வழியாய் மாப்பிள்ளையை மெதுவாகப் பார்த்துவிடுகிறாள். அடி தோழி, இவர்தானோடி என் மனது பிடித்துப்போச்சடி! ஒருக்கால் நான் சற்றுக் கருப்பாயிருக்கிறேனென்று அலட்சியம் செய்வாரோடி?

புருஷன்:—வந்தானையா! மாலையிட! கூட்டம்—கனகூட்டம். வெட்கத்தைவிட்டு மனைவியை எப்படிப் பார்க்கிறது! தலை நிமிர கூச்சப்படுகிறான். கந்தர்வி எதிரில் வந்து விடுகிறாள். பார்த்தானையா! மேல் புருவம் தூக்கி. சிலர் நகைத்தார்கள். சிலர் பரிகாசம் பண்ணினார்கள். அதற்குள்ளாகப் பெண்டாட்டியைப் பார்க்காவிட்டால் என்ன மோசம்? சீ, வெட்கமில்லையா? என்றார்கள் சிலர் பெண் சற்று கருப்புதான். பையன். சொல்லமாட்டாமல் முழிக்கிறான். தலையெழுத்துக்கு விரோதம் இல்லையென்று தனக்குள்தானே தேறுதல் பண்ணிக்கொள்கிறான் எலலாருக்கும் இப்படித்தான் என்று மனம்தேறுகிறான்—ஆறுகிறான்.

விவாகமும் மங்களகரமாக நடந்து முடிவு பெறுகிறது. சம்சார பாரம் தலையிலேறுகிறது. தன் தாய்க்கும் மனைவிக்கும் நித்தியமும் சண்டைகள்தான். போதாக்குறைக்கு அவன் புதுமாமியும் தன் மகளுக்குத் துணைவந்ததுபோல வீட்டோடே குடியேறி விடுகிறாள். நெருப்புடன் காற்றும் சேர்ந்து விடுகிறது. வீடு கலக சமுத்திரமாகிறது. ஆரம்பத்தில்தானே தன் மனைவியிடத்திலிருந்த ஆசையால் அவளுக்கு அதிக இளக்காரம் கொடுத்து விட்டான். அவள் சொற்படியெல்லாம் தாளம் போடுகிறவனாய்—உட்பட்டு நடந்து கொள்ளும் மாதிரியில் இறங்கியிருந்தான். இப்போது அதை மீறித் தான் மனைவியைக் கண்டிக்கவோ அவனுக்கும் தைரியம் குறைவாய் விடுகிறது. மனைவியின் பேச்சோ ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அம்பு போலிருக்கிறது. நெஞ்சினுள் ஆழத்தைத்து வாதனைப்படுத்துகிறது. இந்தப் பக்கம் பார்த்தால் தனது மனைவி, அந்தப் பக்கம் பார்த்தால் தன்னை மூன்னூறு நாள் சுமந்து பெற்றதாய், எதிர்பக்கம் நோக்கினால் தன் மாமி,—என்ன செய்வான்—யாரைக் கண்டிக்கிறது? உன் தாயை வீட்டை விட்டுத்துரத்தினால்தான் உன்னோடு வாழ்வேன்—இல்லையாகில் நான் வெளியே போய் விடுகிறேன்—அவளோடு நான் வாழமாட்டேன் என்கிறாள் மனைவி! கல்யாணசுகம் போதும் போதுமென்று அலறுகிறான். கண்ணீர் வடிக்கிறான். இப்படியே அவன் காலமும் கழிந்து முடிவு பெறுகின்றது; இதுவே கல்யாண சுகம்.

பெரிய பாட்டியும் அழுதகண்ணுடன் நோக்குவதும் வயோதிகத்தால் சோர்வுடன் படுப்பதுமாய் இருந்தார். என் தாயோ தனது துக்க மிகுதியால் அதிக மயக்கமாகிப் படுத்து விட்டார். சிறிது எழுந்திருப்பதும் படுப்பதுமாய் இருந்தார். என் தந்தையோ மூக்குப் பொடியை உறிஞ்சியபடியே கண் விழித்து ஸதா என்னைப் பார்த்தவாறு கிடந்தார். இவ்வளவு பாடுகளுக்கு இந்தப் பாழும் நோயிலிருந்து நான் தப்பிப் பிழைத் திருந்தால் வீடு எவ்வளவு உற்சாகத்தோடு இருக்கும்? நான் அழு வதையே மழலைமொழியாக நினைத்து மகிழ்ந்த என் தந்தை— நான் மழலைச் சொற்களாடுவேனாகில் எவ்வளவு பூரித்துப்போவார்?

* * *

என் தாயாரின் அன்னை கடவுள் பதமடைந்த துயரத்தின் நாளில் ஓர் பொழுது—ஒரு குழந்தையை ஒருவர் வீட்டிற்குக் கொண்டுவர, அதைப் பார்த்த என் தந்தையின் அத்தை—"இப் படி ஒரு குழந்தை இருந்தால்—எல்லா துக்கங்களும் ஓடி ஒழிந்து போம்; என்ன கஷ்டம் வந்தாலும் சகிக்கலாம்"—என்று என் தந் தையைப்பார்த்துக் கூறினார். அந்த வாசகம் என் தந்தையின் மனதில் ஆழமாகச் சென்று தைத்தது. அது உண்மையே என்று நான் பிறந்தபோது மகிழ்ந்தார். ஆனால் தன் அருமைத் தமக்கை உயிரோடிருந்து தன் தனயை பெற்ற சேயைப் பார்த்து மகிழக் கொடுத்து வைக்கவில்லையே என்ற குறை என் தந்தையின் மனதி லுண்டு. அந்த அம்மை என் பிந்திய பரிதாப துயரங்களைக் காணமற் போனதில் பெரிய பாக்கியசாலிதான்.

* * *

மறுபடியும் என் கதையை ஆரம்பிக்கிறேன். மணி ஒன்று யிற்று. இரண்டுமானது. என் நிலைமை வெகு மோசத்தில் முடிந் தது. பொழுதுபோய் விடாதா, விடிந்து விடாதா என்று என் தந்தை கடியாரத்தைப் பார்த்தபடியிருந்தார். இரண்டு தீபங்கள் பிரகாசமான வெளிச்சத்தைத் தந்து வந்தன. மலஜலம் ஏதும் இறங்கவில்லை. கபம் பலமாகக் கட்டிவிட்டது. நான் அழவே யில்லை. என் கண்கள் அப்படியே திறந்தபடி சொருகிக் கிடந் தது. என் தந்தை செய்துகொள்ளாத பிரார்த்தனைகளில்லை. பக வானை வேண்டியபடி இருந்தார். முன் 20-தடவைபோன தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் கோரோஜனை மாத்திரையை என் பாட்டி யார் பாதி தருவதாக வெளிக்குப் பேசி, முழுதுமே உரைத்து எனக்குக் கொடுத்தார். எண்ணெய், கோரோஜனை, குங்குமப்பூ, கோரோஜனை மாத்திரை இவ்வளவும் என் வயிற்றுள் சென்றும்

மலஜலம் இறங்கவில்லை. தேகத்தின் உள் அவயவங்கள் தங்கள் வேலையைச் செய்யும் ஜீவ ஸக்தியை இழந்துவிட்ட பிறகு, இந்த மருந்துகளெல்லாம் வயிற்றில்போய் என்ன செய்யும்? கவலை அதிக மாயிற்று.

*
* *

மணி மூன்றானது. இதுகாறும் இழுத்துக்கொண்டு வலிப்புடனிருந்த என் கைகள் இரண்டும் சோர்ந்து வீழ்ந்து விட்டன. கைகளின் ஆட்டம் அடங்கி ஒடுங்கிவிட்டது. என் தந்தை ஜன்னி இறங்கி குணமாவதின் அறிகுறி தான்—கைகளின் இழுப்பு நின்றமை—எனப் பேதமையால் நினைத்தார். கைகளிலிருந்த ஜீவ ஸக்தி ஒடுங்கியதே உண்மையான காரணம். அதிகமாக வந்து கொண்டிருந்த ஸ்வாசம் மெதுவாக ஓடிற்று இரண்டொரு விசை நின்றுபோய் மறுபடியும் ஸ்வாசம் ஆரம்பமாயிற்று.

*
* *

என் தாயாருக்குப் பலமான மயக்கம். பலமுறை எழுப்ப வேண்டியதாயிற்று. மயக்கத்தையும் சமாளித்துக்கொண்டு எழுந்து வந்து என்னருகே உட்கார்ந்தனர். என் தத்தளிப்பான நிலைமை கண்டு புலம்பிற்று. ஸ்வாசம் இன்னும் மெதுவாயிற்று. பாட்டியார் என் நெற்றியில் திரிசூரணமிட்டனர். உடனே யாவரும் கலங்கி அழுது விட்டனர். என் தந்தை வெளிக் கதவைத் திறந்து அலறிக்கொண்டு அனைவரையும் வருமாறு கூவிவிட்டு என்னருகே ஓடிவந்தார். ஸ்வாசம் வரவர அடங்கிக் காட்டிற்று. எந்த நிமிஷமோ, எப்படியோ என்று அனைவரும் பட்ட பிரலாபம் அநுபவித்தவரே அறியவல்லார். என் ஸ்வாசம் முற்றிலும் அடங்கின தன்மைக்கு நெருங்கிற்று. மரணாவஸ்தை தொடங்கியது. கடைசியில் என் இடது பக்கத்து வாய் இருமுறை கோணிக்கோணி இழுத்தது. யாவரும் அலறினர். தக்ஷணமே ஸ்வாசம் நின்று விட்டது. என் வாயைச் சிறிது திறந்து மூடினேன். என் ஜீவன் பிரிந்துவிட்டது! என் வாழ்க்கை முடிந்தது! இவ்வுலக வாசம் பூர்த்தி பெற்றது! நான் சவமானேன்!

*
* *

என் தந்தை எதிராஜா, எதிராஜா—என்று கதறினர். நான் இறந்த பின்பே—எனக்கிட்ட நினைத்த பெயரைக் கூவி என்னையழைத்தார். என் தாயோ பெற்றவயிறு பற்றியெறிய அம்மா! அம்மா என்று கூவினர்—பிரலாபித்தார். பாட்டிமார்களனைவரும் புலம்பினர். நித்திரையிலிருந்த அனைவரும் ஓடி வந்தனர். வீடு அழுகையும் பிரலாபிப்புமாயிற்று. நான் ஆவி பிரிந்த தரு

ணம் மணி சரியாக நாலரை. அன்றுதான் மே-மாதம் 24-ம் தேதி புதன்கிழமை. அன்றையதினம் தான் எனக்குப் புண்யாவசனம் செய்ய நாள் குறித்திருந்தனர். பந்துமித்திரர்களெல்லாருக்கும் சொல்லி யிருந்தனர். மகுடயோக சம்பன்ன ராமர் தம் பட்டாபிஷேக நேரத்தே வனவாச சடை முடி மரவுரி ராமரான மாதிரியில், என் புண்யாசன தினத்தன்று நான் ஆவிபிரியும் காலம் வாய்த்தது.

*
* *

நான் பிறந்ததும் செவ்வாய் இரவு. இறைவன் திருவடி நீழல் அடைந்ததும் செவ்வாய் இரவே. அதாவது புதன் விடியற் காலை. எனது ஜனனம் ஏப்பிரல் 24. எனது ஆவி நீக்கம் மே-23. சரியாக ஒரு மாசம்—ஒரு மாசக் குழந்தையே நான்!

*
* *

சின்னஞ் சிறு பாலகியே, தெய்வீக ரத்தினமே, வண்ணக் கிளியே, மானே, மரகதமே, அருமருந்தே, கண்மணியே! என்று தன்னுள் என் தந்தை கூறிக்கொண்டு புலம்பினர். ஐயோ தொட்டில் கட்டினேனே, எவ்வளவோ ஆசைகளை மறைத்து வைத்திருந்தேனே, நான் இருக்க நீ போன தென்னையோ, எனக்குப் பிறகல்லவோ நீ செல்ல வேண்டும், ஏமாற்ற மடைந்தேனே, ஜாதகம் பொய்த்து விடுமென்றல்லவோ எண்ணினேன். எப்படி சகிப்பேன், எவ்விதம் பிரிவாற்றுவேன், எங்ஙனம் மறப்பேன், வீடு நிறைந்து நின்றாயே, உன் இனிய நித்திரைக்குப் பங்கம் வராதபடி பீரோவ்கூட சத்தம் படாமல் பயந்த தன்மையுடன் திறப்பேனே, கடவுள் கொடுத்து வாங்கிக்கொண்டனரே, நமது குழந்தையல்ல, இனி நமது குழந்தையல்ல, நமது சொந்தம் போய்விட்டது, பாவீயத்துக்குத் தர எண்ணினேனே, பட்டாசு சுடுவாயென்றிருந்தேனே, அக்காவுக்குப் பதில் உன் முகம் பார்த்துக் களிக்க எண்ணுதெல்லாம் எண்ணினேனே,—என்று பலவாறாய்ப் பிரலாபித்தார். என் தேகம் கட்டை போலாயிற்று. சில்லென்றிருந்தது. எனது கன்னங்களில் முத்தம் கொடுத்தார். இந்த முத்தம் நான் உயிரோடிருந்தபொழுது கொடுக்க அவருக்கும் எனக்கும் பாக்கியமில்லாது போயிற்று! என்ன கண்றாவி! காலவசம்! கொடுமை!

*
* *

என்னை ஒரு பலகையில் படுக்கவைத்தனர். என் முகத்தை ஈரத்துணிகொண்டு சுத்தி செய்தனர். எனக்கு என் அன்னை அன்றொரு நாள் என் கண்ணுக்கும் புருவத்திற்கும் வைத்த மை—அப்படியே இருந்தது. அதனிடையே சாந்துபொட்டிட்டனர். இறந்த பிறகும் கூட நான்மிக்க லாவண்ய சுகுமாரியாய் ஒளி வீசி நின்

றேன். அன்று திறந்த என் கண்கள் அப்படியே நின்று கிடந்தன. உயிரகன்ற பிறகும் கூட கண்கள் மூடப்பெறவில்லை. என்ன நோயோ பாழும் நோய்! ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர்களைத் தருவித்துக் குணப்படுத்தவும் நேற்று பகலில் பிரமாதப் பேச்சு நடந்தது. எந்த டாக்டர் வந்தென்ன செய்ய? என் கால முடிவுக்கு எந்த மருந்து தான் சுகிர்தம் தரப்போகிறது! என்னை மறுபடியும் தூக்கி உட்காரவைத்து பின் பக்கம் திண்டிட்டு சாயவைத்தனர். கண்கள் திறந்தபடியே இருக்க, என் பவள வாய் புன்னகைத் தோற்றம் காட்டி ஒளிர, என்னைப் பார்த்தவர்களெல்லாம் நான் இறந்த பாவனையில் காணுததது நோக்கி மனது கரைந்துருகினர்.

* * *

என் தந்தைக்கோ எங்கு என்னை எடுத்துச் சென்றுவிடுவார்களோ! அந்தப் பொழுது எங்கு நேருங்கி விடுகிறதோ என்ற அதே ஏக்கமாய் என் வதனத்தை இமைகொட்டாமல் பார்த்தவாறு கிடந்தார். என் தாயையும் நன்ருகப் பார்—பார் என்று கூறினுர். என்னைப் பொட்டகிராப்படம் பிடிக்க நான் பிறந்த நாள் முதற் கொண்டே அவருக்கு எண்ணம். அது அவசகுனமாகும் என்று இருந்துவிட்டார் இனி இந்த சகுனமென்ன இருக்கிறது? படம் பிடிக்கவேண்டுமென்ருர். ரூபாய் ஆறு சொன்ஞர்கள். எவ்வளவாயினும் சரி என்ருர். பிறகு வேருெரு உத்தமர் என்னைப் பார்த்து உருகி இரண்டு ரூபாயில் படம் பிடிக்க ஒப்பினுர். அவர் நன்றி மறக்கலாகாது. இப்படிப் படம் பிடிக்கும் வகையில் சிறிது காலம் போகாதா—அதுவரையும் குழந்தை இருக்காதா என்ற எண்ணமும் ஒரு புறம்! கடைசியில் எனக்குக் காசுமாலையிட்டு சிங்காரித்து வீட்டின் கடைசி கட்டில் படமும் பிடித்தனர். அப்போதும் நான் புன்னகைத் தோற்றத்துடனேயே இருந்தேன். நான் நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். படம் பிடிக்கும் வேலையும் முடிவு பெற்றது. நான் சவக்குழிக்குச் செல்லும் வேளையும் பிராப்தமாயிற்று.

* * *

மறுபடியும் நான் ஆவியகன்ற இடத்திற்குக் கொண்டுவந்தனர். சாந்து திலகத்தை நீக்கி திரிசூரணமிட்டனர். அதுநோக்கி யனைவரும் அழுதனர். எனது சவக்கோலம் பூர்த்திபெற்றது. என்னை எனது தந்தையின் மடியிற் கிடத்தினர். அப்போது அவர் வயிறு எப்படி எரிந்ததோ! அலறினுர். முத்தமிட்டுக்கொண்டு கதறினுர். உயிருடனிருந்தபோது என்னைத் தமது மடியில் வளரவிட்டுப் பார்க்கும் பாக்கியம் பெற்ருரில்லை. அது அவர் செய்த

பாவம்! பின் என் தாயின் மடியில் கிடத்தினர். முன்னூறு நாட் சுமந்து பெற்ற என் தாயின் கொதிப்பு, சோரம் மிக்க பரிதாபகர மானது. அலறிய சப்தம் அசரீரியான என் நெஞ்சைத் துளைத் தது. என் மாதா எனக்குப் பால் தந்தார். என்னவோ ஆசை!

* * *

என் பாட்டியார் என் தந்தையிடம் நெருக்கி உன் இஷ்டம் போல் செய், இப்போதோ சாயந்திரமோ எடுக்கலாம் என்றனர். என் தந்தை சாயந்திரமாகட்டுமென்றார். கூட இருந்த புருஷர் கள் கூட்டம் ஒப்பவில்லை. ஆடவர்க்கு என்றும் கல் நெஞ்சு தான். பிறர் துயரம் அறியார். வேலை தீர்ந்ததேனக் கழிக்கப் பார்ப்பார். கடைசியில் என்னைத் தரும்படி கேட்டனர். என் தந்தை என் தாயை நோக்கி, ஐயோ கொடுக்கும்படி கேட்கிறார்களே என்று ஓலமிட்டழுதார். என் தாயும் பதறித் துடித்துக் கதறினர். மஞ் சள் தோய்த்த துணியால் என் தேக முற்றும் மூடி, என் முகத்தை யும் மூடவே என் தந்தை தத்தளித்துத் தடுமாறி நிலத்தில் வீழ் ந்து மோதியடித்துக்கொண்டு கதறினர். அதன்மேல் முகத்தி லிட்ட துணியை விலக்கிவிட்டனர். மறுபடியும் என் முகம் பார்க்க என் தந்தைக்கு வசதி வாய்த்தது.

* * *

சவக்குழிக்குக் கொண்டுபோயினர். கன்றைப் பிரிந்த கறவை போன்று என் தாயும் என்னுடனே தொடர்ந்து வந்தார். தந்தையும் உடன் வருவதானர். பாட்டிமார்களும் கூடவே வந்த தனர். நான் இறந்த பிறகுங்கூட என் மீது ஈ மொய்ப்பதைக்காண மனந்தரிக்கிலாது விசிறிகொண்டு வீசிய—அந்த என்னைப்பெற்ற உள்ளங்கள், இப்போது என் உடலத்தை மண்கொண்டு மறைப் பதைக் காண எப்படிச் சகிக்குமோ—பொறுக்குமோ—அறியேன்.

* * *

என் மசானபூமி நெருங்கிற்று நான் பிறந்ததும் மண் ணிடத்தே! புகுவதும் மண்ணிடத்தே! ஒரு மாசத்திற்குள் என் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, உல்லாஸம், பூரிப்பு, சிரிப்பு, அதிகாரம், பிணியின் உபாதை, மருந்துண்ணல், வைத்தியம், மரணவஸ்தை, அந்தியகாலம், முடிவு, தேய்வு, அடக்கம்—யாவுமே, எல்லா நாடக நடனங்களுமே ஆடித் தீர்ந்தாயின. ஈசன் அமைப்பு அப்படியிருந்தது. என்னை என் மசான பூமியில்—சவக்குழியில் மண் மிசை கிடத்தினர். உடனே மண்கொண்டு மூடத் தலைப் பட்டனர். என் பிரிய தாய் துயராற்றாது நிலத்தில் விழுந்து மூர்ச்சைபோயினள். என் தந்தை என் தாயின் மூர்ச்சை தெளியு

மட்டும், தெளிந்து என் வதனத்தை மற்றொரு சார் பார்க்குமட்டும் என்மீது மண் தூவாதிருக்க, சூழ இருந்தவரைப் பரிதாபக் கோலமாய்க் கெஞ்சிப் பிரார்த்தனை புரிந்தார். சில நிமிஷங்கள் சென்றது என் தாயின் மூர்ச்சையும் தெளிந்தது அலறிக்கொண்டு குழியினிடத்தே என்னை நோக்கிக் கதறித் துடி துடித்தார் அந்நாள் சந்திரமதிக்கு எவ்வாறு வயிறு எரிந்ததோ அவ்விதம் எரிந்தது. என் தந்தையின் சிற்றப்பன் ஒரு பிடிமண்ணை என் தந்தையிடம் தந்து போடச்சொன்னார். என் தந்தை என் குழந்தை மீது நான் மண் போடவா என்று கதறி மறுத்துவிட்டார். ஆயினென்? மற்றவர்கள் மண்போட்டுமூட ஆரம்பித்தனர். என் கால்கள் மறைந்தன. என் மணிவயிறும் மறைந்தது. என் முகம் மண்ணால் மூடப்பெற்றதும் என் தந்தை பூமியில் விழுந்து அடித்துக்கொண்டு அலறினார். என் தாயின் சஞ்சலம்—பாட்டிமார்களின் பிரலாபம் எழுத்திலடங்காது என் நாடகம் முடிந்தது. ஜனகலக்ஷ்மியைப்போல் நானும் பூமாதேவியினுள் ஐக்கியமானேன்! உலகத்தினின்றும் என் சடலம் மறைந்து போயிற்று!!

*
* *

நான் முன்பு இருந்த கூடத்திற்கு என் தந்தையார் முதலில்வந்தார். பின் என் தாயார் அணுகினார். மற்றவரும் நெருங்கினார். வெறும் இடம், காலி இடமாய், ஜீவகளையற்றுக் கிடந்தது கண்டு கலங்கினார். பதை பதைத்தார். புலம்பினார். பாபா பாபா என்று என் தந்தை பிரலாபித்தார். இது எனது தந்தை எனக்கிட்ட இரண்டாவது பெயர். இந்தப்பெயர் என் உடலம் மறைந்த பின்பே எனக்கு அவர் இட்டார். நான் தளர் நடை நடந்து விளையாடி, எழுந்து உலாவி, கைவீசி என் தந்தையருகே வரும்நாளில் இந்த இரண்டாவது பெயரால் என்னை யழைக்க அவர் எண்ணியிருந்தனரோ யாதோ! என் தாயோ—

"விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்பல், வெருவல்
எழுதல், ஏங்குதல், இரங்குதல், இறைவனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல், துயர் உழந்துயிர்த்தல்
அழுதல், அன்றிமற் றயலொன்றும் செய்குவதறியாள்."

என் தாயின் பிரலாபம் இது:—

*
* *

கர்ப்பமுண்டான நாள்முதலாய் நான் பட்ட பல பாடுகளும் ஈசன் தவிர மற்றெவர்க்கும் செம்மையாய்த் தோன்றாது. ஊரிலுள்ள எல்லோரைப்போல் நான் கர்ப்பவதியாயிருக்கவில்லை. மிக்க கஷ்டமடைந்து, என் மயக்கத்திற்குக்கூட மருந்து சாப்பிட்

டால், மகவு போய்விடுமென்று அஞ்சி, ஒரு அவிழ்தமும் உண்ணாது பிணிகளனைத்தும் பொறுத்து, சகித்துக் காப்பாற்றி வைத்திருந்த என் அருமைக் குழந்தையைப் பறிகொடுத்து—எனக்கு இருக்கும் எண்ணற்ற துக்கங்களையும் நொடியில் போக்கக்கூடிய ஸக்தி வாய்ந்த என் ஆசைப் புதல்வியை ஈசனிடம் தந்துவிட்டு,—சண்டாளியாகிய நான்—எப்படி மனம் பொறுத்திருக்கிறேனோ? என்னைப் போலும் கடுஞ்சித்தமுடையவள் உண்டா?

* * *

எம்பெருமானே! கண்ணால் மகவைப் பாரா முன்னமே, கணக்கற்ற ஆசை நான் கொண்டேனே; உமது திருவடிகளையே தஞ்சமென்று நம்பியிருக்கும் எனக்குத் துரோகம் செய்யலாமா? தஞ்சமென்றடைந்தோரைக் காப்பதல்லவோ உமது கடமை? அப்படியிருக்க, ஏன் என் விஷயத்தில் உமக்கு இத்தனை இரக்கமற்ற எண்ணம்? ஈசா! வேண்டாம்—வேண்டாம்—இந்த சிந்தையை விட்டுவிடுங்கள்! இதுவரை நான் பட்ட பாடுகள் போதும். இனியேனும் என்னைச் சோதிக்காதிருக்கத் தங்கள் திருப்பாதங்களுக்குத் தெண்டம் ஸமர்ப்பித்துக் கேட்டுக் கொள்கின்றேன்

* * *

என் கண்மணி! என்னைவிட்டு எப்படிச் சென்றாய்? இது உனக்கு நியாயமா? உன்னை மேலுலகத்திலுள்ள ஸ்வாமிகள், அம்மம்மார்கள் வந்தழைத்தார்களோ? அல்லது தேவர்கள் எதிர்கொண்டழைத்தனரோ? ஆ! என் அருமைக் கண்ணே! உன் ஆசை மாதாவை விட்டு விட்டு வருவதாய் வாக்களிக்க உன் மனமும் இடம் தந்ததா? உன்னை நான் அடைந்த நாள்முதல் பல பாடுகள் பட்ட, உன்னைப் பெற்ற தாயைக் கைவிட்டு இறைவன் பாதம் சேர உன் இருதயமும் ஒப்பியதா? இவ்விதமும் என்னைச் சோதிப்பது உனக்கு நியாயமா?

* * *

என் கண்ணே! சென்றது செல்க. நான் கண்ட ஓர் கனவினால் நீ என் தாயின் கரத்தில் ஸர்வாலங்கார பூஷிதையாய், மேலுலகத்து நகைகளை யணிந்து என் முன் தோன்றியதால், என் குழந்தாய், நீ நற்பதவியையே அடைந்திருப்பாயென்று நம்பி மனோதிருப்தி எய்துகின்றேன்.

* * *

ஆ! என் குலக்கொழுந்தே! உன்னைப் பெறுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே என் பேதமையால் நான் நினைத்த எண்ணங்களாவன:—என்னுயிர்த்துணைவி! உனக்கு இரண்டுமாத

முதல் மூன்று வருஷம் வரையில் கிருஷ்ண கொண்டையிட வேண்டுமென்றும், எப்படியேனும் என் சரட்டின் பதக்கத்தை உனக்கு வைத்துப் பின்னலாமென்றும், தினந்தோறும் சோப்பு போட்டு, பவுடர் தூவி, மையிட்டுப் பொட்டிடலாமென்றும், சிலுக்கு பட்டுகளில் சட்டைகள் தைக்கலாமென்றும், நாலுவயது முதல் ஏழுவயது வரையில் பக்கவாவு எடுத்து தலை சீவி, மேல்தரமான பட்டு பாவாடைகள், சட்டைகள் நான் அணிவித்து அழகு பார்க்கலாமென்றும், கைகளுக்கு காப்பு, கொலுசு, ஒரு பவுனில் வங்கி ஒன்றும், கழுத்திற்கு அரைப்பவுன் கோர்த்து தங்கக்கயிறு ஒன்றும் செய்து போடலாமென்றும், காதுகளில் வெள்ளைத் தோடும், லோலோக்குப் பச்சைக்கல் போடலாமென்றும், வெள்ளையில் சிறுகல் வைத்து புலாக்சொன்றும், விரல்களுக்கு இரண்டு மோதிரங்களும், காலில் கெட்டிக்கொலுசு ஒன்றும், சிறு பட்டைக்கொலுசும் போடலாமென்றும்—நினைத்தேன்!

*
* *

நாள்தோறும் பள்ளிப்பாடம் கேட்கலாமென்றும், ஆறு வகுப்பாகிலும் படிக்கவைத்து, பின் வீட்டில் ஆள் வைத்துச் சொல்லித் தரலாமென்றும், இன்னும் பலவிதமாய் ஏதேதோ என் மனதில் தோன்றிய ஆசைகளெல்லாம் இப்போது என் மனதை ஒன்றுசேர்த்து வாட்டுகின்றது. சகிக்க சக்தியில்லை.

*
* *

என் ஆருயிர்த்துணைவி! என் செல்வியே! என் மனதின் பலத்தை அடியோடு கொண்டுசென்றனையோ? இது உனக்கு நியாயமா? என் கண்ணே! எனக்குப் பலவித்திலும் ஆசை காட்டி மோசம்போக விட்டனை! பெற்றவயிறு—எந்தன் கண்ணே!—பற்றி எறியுதம்மா! போதும் போதும் உன்னால் நான் பட்ட கஷ்டம்!

*
* *

ஸர்வேஸா! மேற்சொன்னபடி யெல்லாம் என் மனதில் நினைத்துப் பேராசை கொண்டிருந்தேனே! எனய்யா என் மகவை யழைத்துக் கொண்டனை? தந்து வேடிக்கை பார்க்கிறாய்? வேண்டாம். உமக்கு இவ்வேடிக்கையும் விநோதமும் சரிதானா? என் மகவை எங்கு வைத்திருக்கிறீர் சொல்லுமையா? பகவானே! எனக்கு சக்தி கொஞ்சமும் இல்லை. என் மனோவியாகூல மிகுதியால் எங்கு என் புத்திதடுமாறி பித்து பிடித்து விடுகிறேனோ அறியேன். இனி அவ்விதமெல்லாம் சோதனை வேண்டாம்.

ஆ! என் மதலாய்! உன் சிறு வாயைத்திறந்து கொண்டு பால் குடிக்கவருவாயே! இப்போது எங்கம்மா போனது? அச்சிறுவாயுடன் உன் தலை மயிரைப்பிடித்து இழுத்துக்கொள்ளும் உன் அழகிய கரங்கள் எங்கேயம்மா? ஆ! என் புத்திரிகாரத்தினமே! இப்பாழும் மயக்கத்தால் உன்னை நன்ருய்த் தூக்கவில்லை! என் ஆசை தீரவில்லை! சற்று தூக்கினல் பலஹீன மிகுதியால் என் கைகள் சோர்ந்துவிடும்! ஆதலின் தூக்காமலிருந்தேன்! வெட்க மிகுதியாலும் உன்னைத் தூக்கவில்லை! என் கண்ணே! இதற்காக இப்பாவியை நொந்துகொள்ளாதே.

*
* *

நான் என்ன செய்திருந்தபோதிலும் உன் அன்னையை க்ஷமித்துவிடம்மா. ஐயோ! நீ உயிருடன் இருந்தால் என்னை அதிகாரம் செய்யும் போதும் திட்டும் போதும் உன் மதலை வார்த்தைகளால் உடல் பூரிப்பேனே! குழல் இனிது—யாழ் இனிது—என் போரெல்லாம்—தம்மக்களின் மழலைச் சொற்கேளாதவரன்ருே?

* *
*

என் குலக்கொழுந்தே! இவ்வருஷம் கிருஷ்ண ஜெயந்தியன்று நீ இருந்து மகிழ்ச்சி விளைப்பாயென் றல்லவோ வெகு நாட்களாய் எண்ணி எண்ணி ஏக்க முற்றேன். என் கண்ணே! உனக்குக் கிருஷ்ண கொண்டையிட்டால் எவ்வளவு அழகாய் இருப்பாய்? மகாபாவியாகிய எனக்கு அதைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை. ஆனுலும் இப்படி ஆசைகள் பலகாட்டி மறைந்தனையே! பிரஸவித்த தினமே போயிருந்தால் ஒரு பாடுமில்லையே! என்னவோ இப்படியும் சொல்லிக்கொள்ள என் மனம் வைக்கிறது—தடுமாறுகிறது.

* *
*

அம்மணி! நீ புறண்டு படுத்துக்கொள்ளும் படுக்கையின் அழகும், புன்னகை பொருந்திய நின் திருமுகமும், நின் ஒரு விதமான பார்வையும், என் கண் முன்பு தோன்றி மனதைப் புண்படுத்துகின்றது. இவைகளை இனி எப்போது காண்பேன்! பால் வேண்டுமென்று நின் கேசங்களை சிறு விரல்களால் இழுத்துக் கொண்டு அழுவையே.

* *
*

உனக்கு இருந்த அடையாளங்கள் முற்றும் நல்லதாகவே இருந்தனவே! பெரும் நெற்றியும், பெருத்த காதுகளும், மாறு கண்ணும், கழுத்தில் சற்று கூனியும், நீண்ட கைகளும், இன்னும் நன்னயத்திற்குரிய நற்குறிகளெல்லாம் பொருந்தி இருந்தனவே!

அப்படியிருந்தால் நீ என்றும் சாகமாட்டாய், அறுபது—எழுபது வயதுவரையிருப்பாயென்றல்லவோ பேராசை வைத்திருந்தேன்!

* * *

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம் புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே!"

* * * * *

என் அருமை அன்னையின் பிரலாபம் மேற்கூறியது. என் அன்னாய்! வருந்தாதே சும்மா—அழுதாற் பயனென்ன? நொந்தாற் பயனென்ன? ஆவதில்லை; நன்மையும் தீமையும் பங்கயத்தோன் எழுதாப்படி வருமோ? சலியாது இரு என் ஏழை நெஞ்சே! என் அன்னாய்! நான் உனக்கு வானுலகத்திலிருந்துங் கூறும் தேறுதல் ஆறுதல் இதுவே!

* * *

என் போன்ற இளஞ்சிசுவொன்றின் மரணம் நோக்கியே ஜான் மீல்டன் என்ற ஆங்கில மகாகவியும் தமது இளமையில்—"ஐயோ பூத்துமுன்னே போறிந்துபோன பூவே"—என்று மனங் கரைந்து பாடுவதானார்.

* * *

என் தொட்டில்—நான் கண்வளர்ந்த தொட்டில்—வெறுமையாய் நின்றது காண என் தாய்க்கு—தந்தைக்கு—பாட்டிகளுக்கு மனது தாளவில்லை. என் தந்தை அத்தொட்டிலை என்றும் அங்கு தானே இருக்குமாறு உயரத் தூக்கிக்கட்டினார். எனக்காக சென்னைப் பாட்டியார் தைத்து வைத்த சொக்காய்கள் இரண்டையும் இப்பொழுதுதான் என் தந்தை பிரித்துப்பார்த்து உள்ளம்வாடினார். வீட்டிலே பீரோவில் எனக்கு சற்று பொருத்தமான கிருஷ்ண பொம்மை ஒன்றுண்டு. அதற்கு எனது சொக்காயை என் தந்தை அணிவித்துத் தேம்பித் தேம்பி யழுதார் மற்றொருசொக்காயை இன்னொரு பொம்மைக்குத் தரிப்பித்தார். நான் பூமியினுள் சென்றநாள் இரவு பெரும் மழை. நாமெல்லாம் வீட்டினுள் சுகமே இருக்க—, குழந்தை மழையில் நனைகிறதே—என்று என் தந்தை இரவு நெடுநேரமட்டும் விழித்திருந்து கலங்கினார்—ஏங்கினார். மழையும் விடாது மூன்று நாள் பொழிந்தது. அம்மூன்று தினமும் என் தந்தைக்கு ஆற்ற முடியாத துயரமாயிருந்தது. நான் என்னவோ உயிருடன் இருப்பதுபோலவும் நனைவதுபோலவும் கருதிய அவரது பேதமை எண்ணம் என்னே! என் தந்தைக்கு மகவு பிறந்து கண்டுகளிக்க நினைத்த என் பாட்டியார்

தன் ஆசைகள்—பாடுகள்—இப்படி அவலமாய்ப்போக, அதனல் கனத்த ஜ்வரம் வந்து ஒரு தினமெல்லாம் பிரக்ஞை தவறிக்கிடந்தார். மறுதினமுதற்கொண்டு குணமடைந்தார். என் தாயார் நான் தரித்த பூஷணுதிகளேயும், எனக்குப் பாலூட்டிய சங்கையும், எனக்கு வாங்கிய கெண்டிலோட்டாவையும், எனக்குத் தூவிய பவுடரையும் இவைபோன்றவற்றை யெல்லாம் ஒரு சிறு பெட்டியிலிட்டு—அதைப் பார்த்து பார்த்து வயிறெரிந்து அழுதகண்ணும் சிந்தியமூக்குமாய் மனது ஆற்றமுடியாது கிடக்கின்ருர். என் தந்தையோ நான் உல்லாஸமாய் உறங்கிய, பால் குடித்துக் கண் வளர்ந்த இடத்துச் சுவற்றில் பெரிய எழுத்துகளில் பாபா என்று எழுதி, அங்கு நான் இருப்பதுபோல் பாவனே செய்துகொண்டு, வாயொன்றுபேச, கையொன்றுசெய்ய, மனமெல்லாம் என் மீது நாட—வாட்டமடைந்து நிற்கின்ருர். என் படத்தை தாம் எழுதும் மேஜைக்கருகில் வைத்திருக்கின்ருர். அந்தப் படம் தான் அவ்வருக்கும் ஆறுதல் புகட்டவேண்டும். இனி நானே வானொளியில், ஜெகஜ்ஜோதியில், இறைவன் பாத நீழலில் கலந்து போனேன்! இனி எப்பிறப்போ, எவ்வுடம்போ, எத்துயரோ, எப்படியோ—அறியேன். நான்—ஒரு மாசக் குழந்தை—சரியாக முப்பது நாள்— நான் ஒரு மாசக் குழந்தை

முற்றிற்று.

# பெற்றோர் பெருமை.

---

பெற்றோர்கள் நம்மைப் பெறுவதிலும் பின்பு ஒருமுழங் கூட வில்லாத நம்மை நான்குமுழ மனிதனைய் வளர்ப்பதிலும், அவர்கள் படுங் கஷ்டநஷ்டங்களுக்களவில்லை.

*
* *

அவர்கள் எவ்வளவு உலோபமாகக் காலங்கழித்தாலும், அல்லது செலவுக்குத்தக்க வருவாயில்லாமற் சிக்கனமாய்க் காலந்தள்ளி வந்தாலும் அவர்கள் நம்மை வளர்ப்பதிலும் நம்மனோபீஷ்டங்களை நிறைவேற்றுவதிலும் தாராளமாக யிருந்து வருகிறார்கள்.

*
* *

தவிர அவர்கள் நாம் சகலவிதத்திலும் உயர்ந்த பதவிக்கு வரவேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களாயு மிருக்கிறார்கள்.

*
* *

நாம் எவ்வளவு குற்றஞ் செய்யினும் அவ்வளவையும் மன்னித்துத் திரும்பவும் நம்பேரில் அன்புடையவர்களா யிருக்கிறார்கள்.

*
* *

நாம் அவர்களை வேண்டாத விதங்களெல்லாஞ்செய்தாலும், அவர்களுக்கு நாம் கஷ்டநஷ்டப்பட அல்லது வியாதியால் வருந்த மனம் வருவதில்லை. அதுபோல் தங்களுக்குள்ள ஆஸ்திகள் பூராவையும் அவர்களது குழந்தைகளாகிய நம்பொருட்டு விருத்திசெய்து கொடுக்கவே விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

*
* *

நாம் அவர்கள் சொல்லை அங்கீகரியாமலும் அவர்களை மதியாமலும் நடக்கும்போதெல்லாம் அவர்கள் நம்மைக் கோபித்துக் கொள்வது, நமக்கு அவர்களை வெறுப்புள்ளவர்கள்போல் காட்டினும், அந்தரங்கத்தில் நாம் நல்வழிப்படவேண்டுவதிலும் நம்மனம் வருத்தப்படாமலிருக்கவேண்டுவதிலும் கவலையுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

*
* *

ஆகையால் புத்திரவாஞ்சையால் நம்மை வளர்த்தெடுத்த தாய்தந்தையரை நமக்கு வயதுவந்தபின்பு பலவாறு துன்புறுத்துவது தர்மமல்ல.

நம்மிற் பலசண்டாளர்கள் பெற்றோரைப்படுத்தும் பாட்டை நினைக்கவும் என் சரீரம் நடுங்குகின்றது. எழுதவுங் கைகூசுகின்றது. வருந்திப் பெற்றுவளர்த்த தாய்தந்தையரை வருத்தும் பாவிகளுக்கு என்னகதி கிடைக்குமோ?

*
* *

பெற்றோர் வயிறெரிய வாழ்ந்தோரொருவருமிலர். இன்றைக்கு நன்மைபோலிருந்தாலும், நாளாரம்பத்தில் அவர்கள் மனக்கொதிப்பு இலேசாய்ப் போவதில்லை கண்ணுரக்கண்டும் வருகிறோம்.

*
* *

பெற்றோர்கள் நம்பொருட்டுப் பெரும்பாடுகள் பட்டிருப்பதால் அவர்களுக்கு நம்மால் எத்தகைய கைம்மாறுஞ்செய்து அவர்கள் கடனை யாற்றமுடியாது.

*
* *

பூர்வீகத்தில் அவனவன்செய்யும் பழிபாவங்கட்கு மறுஜென்மத்தில் துன்பப்பட்டிருப்பதாய்க் கேள்விப்பட்டோம். இக்காலத்திலோ மறுஜென்மம் என்ற விஷயத்தை நம்மிற் பெரும்பாலார் நம்பாது புலம்புவதையிட்டு, கடவுளும் நாம்செய்யும் புண்ய பாவங்கட்குத் தக்க சுகதுக்கங்களை இந்த ஜென்மத்திலேயே அநுபவிக்கச் செய்துவருகிறார்.

*
* *

பெற்றோரின் வயிற்றெரிச்சலும் கண்ணீரும் கூரிய வாளையொக்கும். ஆகையால் சகோதரர்களே! தாய்தந்தையர் மனம் நோகும்படியான காரியங்களில் தலையிடாமல் அவர்களுக்கு அடங்கி நடந்தும், அவர்களிடத்தில் விசேட பயபக்தி விசுவாசமுடையவர்களாய் நடந்தும் வருவோமாக.

*
* *

அவர்களுக்கு சம்மதமில்லாத எவ்விஷயமும் நமக்கும் விருப்பமில்லாததே—யென மனவுறுதிகொண்டு அவர்கள் மனதிற்கொப்பதாம் ஒரு அற்பகாரியத்தையும் நம் சுயேட்சையாய்ச் செய்யாது மிருப்போமாக. கூடச்சேர்ந்த கெட்டதோழர்கள், தாசி வேசிகள், மனைவி, மனைவியைச் சார்ந்தவர்கள், தாய்தந்தையரின் விரோதிகள் இவர்கள் சொற்கேட்டு பெற்ற தாய்தந்தையரைத் துன்புறுத்தியும் அவர்களைவிட்டு வெளியேறியும் கெட்டுப்போகாமலிருப்போமாக.

சில சமயங்களில் மேற்கண்ட வீணர்களின் போதிப்பு நிரம்பவும் நியாயம் போன்றும், பெற்றோர் செய்வது மஹா பாதகம் போன்றும் நமக்குத் தோன்றும்.

*
* *

அப்படித் தோற்றுவதற்குக் காரணம் நமது பகுத்தறிவினால் அவர்கள் நம் பொருட்டுப் பாடுபட்டவை இவ்விதமென்பதையும் நாம் அவர்களுக்கு செலுத்தவேண்டுங் கடமை இவ்விதமென்பதையும் நன்காராயாத குற்றமே.

*
* *

ஒருக்காலும் நம் பெற்றோருக்கு நம்மைக் கெடுக்கும்படியான எண்ண மேற்படுவதில்லை. ஆகையால் அப்படி எற்பட்டதாய் நினைப்பது அறிவீனம்.

*
* *

நம் பெற்றோருக்கு அவ்வெண்ண மேற்படுவதுண்மையாயின், போதுமான சாவகாசம் அவர்களுக்கு கடந்த வருஷங்களிலிருந்திருக்கிறது. ஆகையால் கருவில் வைத்தே அழித்திருக்கலாம். அல்லது பிறந்த வீட்டில் கழுத்தைமுறித்து நீரோட்டங்களிலும் செடிகொடி புதர்களிலும் வீசியெறிந்திருக்கலாம்.

*
* *

அல்லது நாம் அடங்காமல் வருகிறோமென்று தோன்றியவுடன் ஆகாராதிகளில் விஷத்தைக் கலந்து நம்மைக் கொன்றுமிருக்கலாம்.

*
* *

அப்படிக்கில்லாமல் நம்மை நல்வழிப் படுத்துவதற்காக பல வகையிலும் புத்திமதிகள் சொல்லியும், அளவுகடந்து நாம் போகும் போது நம்மை கண்டிப்பதும் குற்றமாமோ! நன்று, நன்று.

*
* *

பெற்றோர்களைப் போல் நம்முடைய க்ஷேம லாபங்களில் கருத்துள்ளவர்கள் பூலோகத்தில் வேறொருவர் நமக்குண்டோ? கிடையாது. இஃதாலன்றோ.

*
* *

தாயிற்சிறந்த கோயிலில்லை தந்தை சொன்மிக்க மந்திரமில்லை என்ற நீதிவாக்கியங்களும்,

தந்தை தாய்ப்பேண்—என்ற பழமொழியும் ஏற்பட்டிருக்கின்றன.

*
* *

நம் தாய்தந்தையர் கூறுபவைபெரும்பாலும் நமக்கு வெறுப்பைத்தரும். அதற்குக் காரணம் அவர்களைப்போல் நமக்கு வயது வந்தும், பலவிதமாய் கஷ்ட நிஷ்டப்பட்டு அநுபவித்துத் தெரிந்து கொள்ளாமலுமிருக்குஞ் சிறுபிள்ளைத் தனமே காரணமாயிருக்கிறது.

*
* *

ஆகையால் நம் பெற்றோர் கூறுபவை நமக்கு எப்படித் தோன்றினாலும் அவர்கள் சொன்னபடி கேட்டு நடந்து வரவேண்டியதே நம்கடமை.

*
* *

சில சமயங்களில் பெற்றோர்கள் அபிப்பிராயத்தைப் பார்க்கிலும், நம்முடைய அபிப்பிராயமே சரியென்று தோற்றக்கூடும். அது நிச்சயமாயிருந்தாலும் நம்மிஷ்டப்படி நடந்துவிடக்கூடாது. பெற்றோர்களிடம் சாவகாசத்தில் அதைப்பற்றித் தெரிவித்து அவர்கள் சம்மதமும் பெற்றுச் செய்தல் மிகவும் நல்லது.

*
* *

அப்படி நடந்துவந்தோமானால் பின்பு அது ஒரு வேத வாக்காய்த் தோன்றுவதுமன்றி பலவகையிலும் நமக்கு நன்மையைத் தருகின்றது. இது நிச்சயம்.

*
* *

அப்படிக்கில்லாமல் அவர்களை அவமதித்துவிட்டோமானால், அவர்களின் மனவருத்தத்திற் காளாவதுமன்றி, பலவித கஷ்டநஷ்டங்களுக்கும் ஆளாய் விடுவோம் அப்போது நம்மிலும் கவைக்கு உதவாத பாவை வேறு இல்லையாதென்று உலகத்தவர் நகைக்கும்படி அவ்வளவு கேட்டையு மடைவோம். அப்போது நம் மூட அறிவுக்கு அந்நாளில் பெற்றோர் சொல்லைக்கேட்டு நடந்தோமில்லையே யென்ற ஏக்கமுண்டாகும்.

*
* *

தவிர, பெற்றோர்கள் சொல் முதன்முதல் எட்டிபோல் கசக்கும். பின்பு அதே விஷயம் கசப்பு நீங்கித் துவற்கும். பின்பு அதே துவற்பு மாறி இனிப்பாய்விடும்.

ஒரே விஷயம் நாள் செல்லச் செல்ல, பலவிதமாய் நமக்கு நன்மையாய்த் தோற்றுவதற்குக் காரணம்

***

மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்—என்ற கருத்துப்பற் றியே

***

நாம் கல்வி கேள்வியிலும் நாகரீகத்திலும் பெற்றோரைப் பார்க்கிலுஞ் சிறிது ஜாஸ்தி தெரிந்தவர்களாய் நம்மடப்புத்தியால் நினைப்டோம். அப்படி நினைப்பதற்குக் காரணம் நம்மிடத்திலுள்ள அறிவீனங்களைச் சீர்தூக்கிப் பாராமையே.

***

பெற்றோரைப் பேசும் குலதெய்வமாகவும், நமது அதிர்ஷ்ட வசமாக அவர்கள் நஞ்சிறுவயதில் மரியாமல் ஜீவதசையிலிருப்பதாக வும் எண்ணி, கடவுளிலும் பதின்மடங்காய் அவர்களை கொண்டாடி யும், அவர்கள் உத்திரவுப்படி பணிந்து நடந்தும், தகாதனவாகிய குடித்தல், சூதாடல், தாசி வேசியரை கமனம், கொலைகளவு செய்தல், சிற்றினஞ் சேர்கை, பழிப்பனபுதுதல், வம்பு வழக்கு தொடுத்தல் முதலியவற்றை அறவே ஒழித்து விடல்வேண்டும்.

***

ஆசாரம், கல்வி கேள்விப் பயிற்ச்சி, முயற்சியுடமை, வரு வாய்குத்தக்க சிலவு, ஈஸ்வரபக்தி, தர்மசிந்தை, ஜீவவதை செய் யாமை, சற்ஜன சகவாசம், இடுக்கண் களைதல்—முதலிய தகுவன செய்து உலகம் உவக்கும்படியான நல்வழியில் நடப்போமாக.

இங்ஙனம்,

ஒரு மாசக் குழந்தை.

தித்திக்கும் நூதனநூல்!　　　　வி. பி. யில் விலை ரூ. 1-3-0.

# கதாமோஹனரஞ்சிதம்

## ஓர் அபூர்வ கதா நூல்.

சுவை ததும்பிய கதைகளும் நாவல்களும் கொண்டது.

"பிரஜாநுகூலன்" பத்திராதிபரவர்கள் நவீனமாக இயற்றியது.

இக்கதா நூலின் விஷய அட்டவணை.

---


1 நளகீர்த்தி.
2 நான்கு சங்கீத ரஸிகர்கள்.
3 கதவு சாத்து.
4 நிவேதிதா.
5 கர்ண - துரியோதனு.
6 சிரிக்கச்செய்யும் சிங்காரம்.
7 குடித்தன ரீதி.
8 நீதிகள்.
9 ஸ்வர்ணகுமாரி.
10 மூன்று நண்பர்கள்.
11 பேரின்பம் தேவிட்டுமோ?
12 கழுதை மனிதனுவனு?
13 ஒரு சக்கரவர்த்தியும் பாலனும்.
14 குண்டூசியில் கோபுர வாழ்வு.
15 ஓர் இளைஞனின் மாதா.
16 காணமற்போன குமார்.
17 பத்மாவதியின் தடுமாற்றம்.
18 காலேஜ் இராஜகுமாரி.
19 தொலைந்து போ!
20 ஒரு மனிதனின் சிறுமை.
21 இரு வைதீக மாதர்கள்.
22 ராமதாஸ் பந்துலு.
23 திருவாழ்த்தானின் வாக்கு.
24 ஸ்ரீமதி கனகவல்லி.
25 பொடியின் பிரதாபம்.
26 மாதவன்.
27 மூன்று சாதுரியங்கள்.
28 ஹிதமே செய்வோம்.
29 பலதேசத்தார் வழக்கங்கள்.
30 ஓர் திருடனின் துறவு.
31 மாமனரின் சாமர்த்தியம்.
32 ஒரு பிரபுவின் மனைவி.
33 பலவித மனிதர்கள்.
34 ஒரு நாவிதனின் காதல்.
35 வேடிக்கை விநோதங்கள்.
36 விடுகதைகளின் விநோதங்கள்.
37 தமிழாங்கில நேசர்கள். [பவம்
38 ஸ்ரீ காசிராமேஸ்வர யாத்திராநு
39 பார்லிமெண்ட் நிர்வாகம்.
40 இங்கிலாந்தில்இந்தியன்கக்ஷியார்
41 அந்தமான் தீவினரின் அதிசயம்
42 என் கிழத்தனத்தையடைகிறீர்
43 துண்டு துணுக்குகள் [கள்
44 இலக்கணஞானம். [ணங்கள்
45 ஒருஉத்தியோகஸ்தனவானின் சகு
46 கார்படிகனின் வறுமை.
47 வீரவானின் இராஜபக்தி.
48 சந்திரஸ்வாமியின் சாதுர்யம்.
49 தருணசந்திரனின் ஏமாற்றம்.
50 கினவோ! நினைவோ!
51 வீரநாட்டின் வாழ்த்து.
52 தேன் கூடு.
53 நாம் கண்ட அநுபவம்
54 ஷேக்ஸ்பியரது நடிப்பு.
55 தமிழ் மொழிபெயர்ப்பு.
56 பிதா பக்தி (கீதம்)
57 வீணுக்குப் பேசுவது.
58 உழைப்பின் நகரவாழ்க்கை.
59 குதிரை இரவல்!
60 சாமர்த்திய சிறுவர்கள் மூவர்
61 சூடாமணி.
62 இன்பதுன்ப சதிபதிகள்.
63 இருவேந்தர்களின் சமரஸம்.
64 விசாலாக்ஷியின் நாடக அவா
65 நரசிங்கராவின் நாகரீகம்.
66 ஒரு வைத்திய பண்டிதர்!
67 கணித விநோதங்கள்.
68 கைதேர்ந்த தீரன்.

எல்லாம் உலக அநுபவங்கள்! யாவும் ருசிகரமான குறிப்புகளே! வேடிக்கை விநோதங்கள், சிறுவர் சிறுமியர்க்கான விடுகதைகள், காதலர் கடிதங்கள், நாடக விசேஷங்கள், ஆசாரத்திருத்த தமாஷ்கள், நவீன ரஸிகர்களின் மனப்போக்குகள், கோணல்வழிகள், லோகரகஸியங்கள், பைத்திய பாதைகள், வீரரஸ கீதங்கள்; தமிழ்ச்சுவை நிரம்பிய கதைகள், ஆங்கிலப் போக்கையொட்டிய சிறு சிறு நாவல்கள், இன்சுவை யூட்டும் துண்டு துணுக்குகள், தமிழறிவு, ஞானம், உலகநிலை, தேசநீதி, வலிமை, வாழ்க்கை, நேச ஸல்லாபங்கள்—இன்னோரன்ன பல்வகைத்தாய சேகரங்கள் இக் 'கதாமோஹனரஞ்சித''த்துள் நிறைந்து நிற்கின்றன. பார்க்க அழகாய், சொகுஸான பைண்டாய், வாசிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாய் படிப்பவர்க்கே உயர்வாய் ஒளிரும்.

## 1. தமிழ்ச்சுவை.

கதா மோஹன ரஞ்சிதம்:—தமிழ்ச்சுவை பெரிதும் கொண்டது. பலவித பாஷைகள் - எழுத்தியல் - சொல்லியல் - தொடர்பியல் - புணரியல் - பதவியல்-யாப்பியல்-அணியியல்-பொருளியல்-இரட்டைக்கிளவி-தொகைக் குறிப்பு - வெள்ளை, முதுகுவாக்கியம்-சங்கேதம்-பரியாயவணி-விசேஷவணி-முதல், வழி, சார்புநூல்கள்-அலங்காரம்-செய்யுள்-தமிழ், சமஸ்கிருத பதங்கள்-அகஸ்தியர், தொல்காப்பியர் - மங்கலம் - இடக்கரடக்கல்-ஆகுபெயர்-அன்மொழித்தொகை - உண்மைக்கு மிஞ்சி வர்ணித்தல் - இன்னும் அநேக அருமையான குறிப்புகளை உதகரித்திருக்கின்றோம்.

இவைகளை வாசித்தபின்பு இலக்கணநூல்களைக் கற்கப்புகின், அதில் சுவை தோன்றி மேன்மேலும் பயில்தற்கு அவா எழுதல்கூடும்.

## 2. வேடிக்கை விநோதங்கள்

கதா மோஹன ரஞ்சிதம் வேடிக்கை விநோதங்களில் வெகு விசேஷித்தது. சேவகனின் புகழ்ச்சி - ஒரு வைதீகரின் ரூபாய் - அக்காளே - எலுதாம்சொன்னே - உன் கண்ணலம் - மொட்டை - ஒரு தையற்காரன் - பக்கத்து உளவு - லோபியின் கண்ணாடி - காதல் - பெரிய மனுஷ்யர் - ஸ்திரமான கோபம் - ஊமை - வேதாந்தம் - ஆடவர் சிந்தனை - கால்வாய் - பஞ்சபாத்திரம் - தானேசெய்தல் - அழுகை 5 ராஜ்யம் ஜெயிக்கும் - ஒரு லாயரின் உயில் - தூக்கு சிக்ஷையில் சுகம்-சோறளியாத புருடன்-பத்து பெரிய மனிதர்கள் - ஒரு ஹைகோர்ட் வக்கீல் - எது நல்லவேளை - ஒரு தாவா!—சம்பிக்காத ரூபாய் - புதுவக்கீல் - தீய்ந்த ரொட்டி - சுருட்டு வர்த்தகன் - ஒரு கடன்காரன் - தன் சொம்பு - அடியிலே பால் - ஒரே பிடிவாதமா ?—பால்காரன் மகன் - ஒரு சீனதேசத்திருடன் - தாதமய்யங்கார் - மருந்தின் கசப்பு - மறுநாள் மிதத்தல் - கறுப்புக்குல்லா - இன்னும் அநேக விநோதங்கள் இதில் அடங்கியுள்ளன.

## 3. விடுகதைகளின் விநோதம்.

கதா மோஹன ரஞ்சிதத்தில் 66 விடுகதைகளைக் காணலாம். விடுவிப்புகளை மட்டும் கீழே தருகிறேம்.

1-விபூதிப்பழம், 2-குங்குமப்பூ, 3-நெருப்பு, 4-வாழையிலை, 5 - விளாங்காய், 6-புளியங்காய், 7-ஆமணக்கு, 8-குழி, 9-பலாப்பழம், 10-ஆகாசபாணம், 11-தோப்பரை, 12-ரஸ்தா, 13-இதழும் பல்லும், 14-பேச்சு, 15-எழுத்துகள், 16-சிட்டுக்கட்டு, 17-நரைமயிர், 18-அண்ணன், 19-நாக்கு, 20-பனைமரம், 21-உள்ளிப்பூண்டு, 22-கிணறு, 23-ஊசி, 24-தேள், 25-மனுஷ்யன்,

26-ஒரேபழம், 27-கொசு, 28-திண்ணை, 29-கிழிசல், 30-தபால்கடிதம், 31-புத்திமதி, 32-நாளைத்தினம், 33-மாதுரம், 34-வலை, 35-மூக்கு, 36-தேசபடம், 37-சிரல், 38-வியாஜ்யம், 39-கண்ணிமை, 40-மெழுகுவத்தி, 41-கண்ணுடி, 42-மூக்குச்சளி, 43-இருபத்திரண்டு, 44-தேன்கூடு, 45-கட்டில், 46-நக்ஷத்திரம், 47-பருத்திக்காய், 48-மத்தளம், 49-கண்ணுடி, 50-ஒன்று மில்லை, 51-தோசை, 52-கால் கண் காது கை, 53-தென்னைமரம், 54-தேங்காய், 55-நிழல், 56-மழைத்துளி, 57-யந்திரம், 58-பாய், 59-தக்கை, 60-கண் 61-மூக்குக்கண்ணுடி, 62-கதிர், 63-நெற்பயிர், 64-சொக்காய், 65-பாம்பு, 66-ரூபாய், ஒவ்வொன்றும் வெகு நேர்த்தியாயிருக்கும்.

இப்புஸ்தகம் விரும்புவோர் உடனே எழுதிக்கொள்ளவும். சொற்ப காபிகளே கைவசம் உள்ளன. பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

---

☞ ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்கும் ரயில்மார்க்கம், வண்டிப்பாதை முதலிய விவரங்கள் வெகு தெளிவாய்க் காண்பிக்கப்பட்டு உயர்ந்த பதிப்பாய் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. வெகு அருமையான நூல். விலை அணு 5

## ஸ்ரீ விஷ்ணுஸ்தல யாத்திராமார்க்க விவரணம்.

இதுகாறும் வெளிப்படாத நூதன நூல்.

பிரஜாநுகூலன் பத்திராதிபர் தயாரித்தது ☜

(1) சப்தபுரிகள், முக்திநகர், (2) சுயமாக உண்டான ஸ்தலங்கள், (3) தேவர்கள், ரிஷிகளால், நியமிக்கப்பட்ட ஸ்தலங்கள், (4) புண்ணிய தீர்த்தங்கள், அதன் உற்பத்திஸ்தலம், அவற்றை எங்கெந்த இடத்திற் காணலாமென்பது, அதற்கு வழி, (5) மலைமேலுள்ள சன்னதிகளுக்கு வழி, (6) புராண ஸ்தலங்கள் 38-க்கும் வழி, (7) திருப்பதிகள் 108-க்கும் வழி விபரம், ரயில்பாதை, வண்டிப்பாதை, (8) திருப்பதிகளின்மீது மங்களாசாசனம் செய்த பாசுரங்களின் புதுவிதமான நூதன கணிதக் குறிப்பு. (9) யாத்திரைக் குறிப்புகள். இன்னும் அநேக முக்கியமான விஷயங்களும் அடங்கியது. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராதிபர்.

"பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம் திருச்சிநாப்பள்ளி.

---

எல்லோரும் வாங்குங்கள் ! எல்லோரும் படியுங்கள் !

வருஷ சந்தா ரூ. 2.] எல்லோரும் களிகூறுங்கள் ! [வெளிநாடு ரூ. 2-8-0

வேத மூக்கியம் ! வேத சிலாக்யம் !

# பிரஜாநுகூலன்.

நாவல்களுடன் கூடிய ஒரு சிறந்த செந்தமிழ் மாதாந்தரப் பத்திரிகை.

1. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 40 பக்கங்களுடனும் 1904-ம் வருட முதற்கொண்டு எங்களால் வெகு அழகாயும் ஒழுங்காயும் புத்தகரூபமாய் நடைபெற்று வருகின்றது. உலகத்திலே பலவித போதனைகளில் அநுபவ

பூர்வமாய்ப் பிரதி விஷயங்களையும் எடுத்துப் பேசுதல் பொதுவாக எவருக்கும் அதிக கஷ்டசாத்தியம். இப்படி அநுபவங்களை எடுத்து விவரிப்பதில் அவைகளைப் புதுச்சுவை நிரம்பிய சிறு சிறு கதைகளினூடே கலந்து அவ்வழியாகப் போதகஞ்செய்தல் பாராட்டத் தக்கதாகும். பிரஜாநுகூலன் பத்திரிகையை நடத்திவரும் நம்முடைய கருத்தும் இதுவே.

2. "பிரஜாநுகூலன்" பத்திரிகை கதைகளுக்கும் நாவல்களுக்கும் மிகவும் பெயர்பெற்றது. கதைகளைப் படித்து அதன்மூலமாகப் புத்தக வாசிப்பிலே ஒருவித ருசி தோன்றி, அப்படியே பலவிதமான நூல்களையும் வாசிக்க விருப்பமுண்டாகி, உயரிய கிரந்தங்களிலும் பார்வை பிரவேசித்து பழக்கம் மிகுதியாகித் தேர்ச்சி எய்தினோர் வெகுபேர். ஆயிரம் பக்கங்களாக விருந்தபோதிலும் சலியாது படிக்க விருப்பம் விளைப்பது கதைகளும் நாவல்களுந்தான். பிரஜாநுகூலனில் பிரதிமாதமும் புதிய கதையொன்று காணலாம்.

3. "பிரஜாநுகூலன்" பத்திரிகை பிரபஞ்சத்தின் அநுபவ விநோதங்களை வெகு நன்றாய் எடுத்துக் காட்டுகிறதென்று எல்லோரும் புகழ்கின்றார்கள். சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் தமது உள்ளத்தில் மறைந்துநிற்கும் ரகசியங்களெல்லாம் இதிற் காணப்படுகின்றனவேயென்று வெகுவாக வியந்து நேசிக்கின்றனர். உலகத்தில் பிரதியொரு மனிதனிடத்திலும் நிகழப்படாநின்ற அனுபவ விஷயங்களைத் திரட்டிக் கதா ரூபமாகக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம் ஏனென்றால் அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும், அதனினும் மேம்பாடான படிப்பினையும் வேறேதுமில்லை. அநுபவமே குரு, அநுபவமே அரசன், அநுபவமே சாஸ்த்ரம், அநுபவமே சாக்ஷி, அநுபவமே உத்தம சிநேகிதனுயுமிருக்கிறது.

4. "பிரஜாநுகூலன்" பத்திரிகை உலக நன்மையைக் கருதி வெளியிடப்படுகிறது. அரிய பல நூலாராய்ச்சியாலும், அனுபவ உலகவியல்பாலும், அறிவுடையோர் தெரிவித்த கேள்வியளவாலும், கற்று, உணர்ந்து, அடைந்து கேட்ட பயனெல்லாம் இப்பத்திரிகையில் எல்லோரும் கற்று உணர்ந்து அடையலாம். எந்த சாதிக்கும் எந்த சமயத்திற்கும் எந்த நூலிற்கும் இதன் கருத்து ஒத்திருக்கும். பாலர்கட்கும் இது பயன் தரும் குமரர்கட்கு மிது நலங்கொடுக்கும். விருத்தர்கட்கு மிது மேலாம்பயனே. வெறுங்கதையன்று. வீண்வளர்ப்பன்று. காசு பறிப்பதற்கன்று; கௌரவங் கருதியன்று. அதன் பெருமை பார்த்தால் தெரியும், படித்தால் அறியலாம்.

5. "பிரஜாநுகூலன்" பத்திரிகை காகிதத்தாலும் எழுத்தாலும் வேலையழகாலும், விஷய அருமையாலும், நடையின் இனிமையாலும், நாகரீக மிகுதியாலும் உயர்ந்து விளங்குகிறது. ஆழ்ந்த கருத்தமைந்து இனியசொற்களால் எளிய நடையோடு எல்லோருக்கும் பயனளிக்குமாறு சந்தமினிய சுந்தரத் தமிழில் எழுதப்பட்டுத் தேனினுஞ் சுவைத்துப் பாலினும் வெளுத்துப் பொருளினும் மிகுத்து அலங்காரம்செய்து அறிவை விளக்கி ஆநந்தங் கொடுப்பதாயிருக்கின்றது,

6. "பிரஜாநுகூலன்" பத்திரிகை 14 - வருஷங்களாக நடைபெற்று பெருந்தன்மை வாய்ந்த தமிழ்நாடெங்கணும் பரவியுள்ளதென்பதை யாவருமறிவார். இதைப் பூர்ணமாய்ப் படித்து, தாங்கள் உடனே இப்பத்திரிகைக்கு சந்தாதாரராகவேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

☞ மானேஜர், பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம், திருச்சி.